**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 87/2018</u>**

நாள் 04.03.2025

PW1 – வேலுச்சாமி

த/பெ – லேட். கருப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2025.)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. 12.02.1975-ம் தேதியிட்ட பாக பத்திரப்படி பாகமாக வந்த புங்கா கிராம சொத்தை அம்மாசை கவுண்டர் 2-ம் பிரதிவாதியான ராசன் (எ) பொன்னுச்சாமிக்கு விற்று விட்டார். கிரைய ஆவண எண்.1805/1983-ன் படி கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். அதேபோல் அந்த புங்கா கிராமத்தில் ராமசாமி கவுண்டருக்கு பாகமாக வந்த சொத்தையும் 16.02.1983-ம் தேதியில் ஆவண எண்.240/1983-ன் படி 2-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அந்த புங்கா கிராமத்தில் 2-ம் பிரதிவாதிக்கும் பாகமாக சொத்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் 2-ம் பிரதிவாதிக்கு மொத்தம் 3.74 ஏக்கர் சொத்து புங்கா கிராமத்தில் பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு ராமசாமி கவுண்டரும், அம்மாசை கவுண்டரும் 2-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணங்கள் செல்லாது என்று கடந்த 40 வருட காலமாக நாங்கள் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. அதேபோல் அவிநாசி வேட்டுவபாளையம் கிராமத்தில் சர்வே எண்.443-ல் 1.03 ஏக்கர் சொத்தான கொமரக்காடு என்கின்ற பூமியை அம்மாசை கவுண்டர் வைத்துள்ளாரா என்றால் அவர் இருக்கும் போதே பாகம் பிரிக்கப்பட்டு வேறு நபர்களுக்கு விற்று விட்டார்கள். மாரப்ப கவுண்டருடைய பங்கு பூமி விற்று விட்டாரா என்றால் அது எனக்குத்

தெரியாது. விற்கப்பட்ட சொத்துக்களை தவிர்த்து மற்ற சொத்துக்களைப் பொறுத்து தான் இந்த பாக தாவாவை தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு விற்ற சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்கள் செல்லாது என்று எந்தவொரு பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். ராமசாமி மற்றும் அவரது குழந்தைகளான 8,9,10 பிரதிவாதிகள் துளசியம்மாள் அவர்களுக்கு 28.04.1993–ம் தேதியில் ஆவண எண்.1256/1993–ன் படி வேட்டுவபாளையம் சொத்தை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. 2015–ம் ஆண்டில் எனது தந்தை வழக்கு தாக்கல் செய்த பின்பு 19.07.2013–ம் தேதியில் 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் உள்ள தான பத்திரத்தை பற்றி தெரியும். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் பேர் பாதி சொத்தை பொறுத்து எழுதி கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தனித்தனியாக சொத்துக்களை கொடுப்பதாக குறிப்பிட்டு காட்டியுள்ளார் என்றால் சரிதான்.

3. வழக்கு தாக்கல் செய்த போது வழக்கு சொத்துக்களின் மதிப்பு எவ்வளவு இருந்திருக்கும் என்றால் வேட்டுவபாளையத்தில் உள்ள சொத்துக்கள் மட்டும் ஒரு சென்ட் ரூ.5,00,000/– மதிப்பு கொண்டிருந்தது. புங்கா கிராமத்தில் உள்ள சொத்துக்கள் ஏக்கர் ரூ.40,000/– மதிப்பு இருந்தது. தாவா சி செட்யூல் சொத்தான நத்தம் வீடு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் அம்மாசை கவுண்டர் பெயரில் தான் பட்டா உள்ளது. அந்த பட்டா எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 1980 –ல் பட்டா கொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் உள்ள 1 முதல் 4 பிரதிவாதிகள் தனித்தனியாக அவரவர்கள் வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் யார் யார் பெயரில் பட்டா இருந்து வந்தது என்பது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். தாவா சொத்துக்களில் அம்மாசை கவுண்டர் 2013-ம் ஆண்டில் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரப்படி அந்த தரப்பினர்களுக்கு மட்டுமே சொத்து பாத்தியம் என்றும், அதில் வாதிகளாகிய எங்களுக்கும், 5-ம் பிரதிவாதிக்கும் எந்தவித பாத்திய உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. அம்மாசை கவுண்டர் என்னென்ன தொழில் செய்து சொத்துக்களை சம்பாதித்தார் என்றால் விவசாயம் செய்து சொத்துக்களை சம்பாதித்தார். அம்மாசை கவுண்டர் வேப்பங்கொட்டை, எள், கடலை, பருத்தி அனைத்தையும் வாங்கி வந்து அரைத்து விற்பனை செய்து அதில் வந்த வருமானத்தை வைத்து தான் சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல. அம்மாசை கவுண்டர் திருப்பூருக்கு 10 முதல் 30 டின் எண்ணெய்களை கொண்டு சென்று திருப்பூரில் விற்று வந்தார் என்றால் இல்லை. அவ்வாறு கஷ்டப்பட்டு சம்பாதித்த சொத்துக்களை முறைகேடாக அடையும் எண்ணத்துடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே அம்மாசை கவுண்டர் தனது மகன்களுக்கு தான செட்டில்மெண்ட் கொடுத்தது போக பாக்கி வைத்திருந்த சொத்துக்களை தனது மகள்களுக்கு 2013-ம் ஆண்டில் பாகம் கொடுத்த சொத்துக்களை பொறுத்து மட்டும் பெண்களுக்கு அந்த சொத்து செல்லக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.03.04 13:59:45 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**